**In the Court of Judicial Magistrate No.I, Kovilpatti.**

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII, Cr.P.C)

| | | |
|---|---|---|
| Case No. | : | CC No. 9/2024 |
| Deposition of witness for Prosecution | : | P.W–1 |
| Name | : | முத்து, வயது 40 |
| Father Name/Husband Name | : | பொன்னுச்சாமி |
| Village | : | ஆவாரம்பட்டி |
| Taluk | : | திண்டுக்கல் |
| Calling | : | செண்டரிங் வேலை |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 01st day of March 2024.

**(எதிரி ஆஜர் இல்லை கு.வி.மு.ச பிரிவு 317 ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

<u>**முதல் விசாரணை**</u>

1. நான் தற்போது ஆவாரம்பட்டியில் வசித்து செண்டரிங் வேலை செய்கிறேன். எதிரியை தெரியும் எங்கள் உரைச்சேர்ந்தவர். 24.09.2023 ஆம் தேதி இரவு 09.00 மணியளவில் கட்டாலங்குளம் அருகே நாங்கள் தங்கியிருந்த கூடாரத்தில் இருந்த போது அங்கு மது போதையில் வந்த எதிரி இரும்பு கம்பியால் என் இடது முன்னந்தலையில் அடித்தார். அதில் எனக்கு இரத்தக்காயம் ஏற்பட்டது.
2. நான் மயங்கி விழுந்த உடன் அவர் கம்பியை போட்டுவிட்டு சென்றுவிட்டார். அப்போது அங்கிருந்த தங்காபண்டி, பழனிச்சாமி, கோபி, மணி ஆகியோர்கள் என்னை அங்கிருந்து கோவில்பட்டி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தார்கள்.
3. நான் சிகிச்சையில் இருந்த போது, நாலாட்டின்புதூர் போலிசார் வந்து விவரம் கேட்டார்கள். நான் மேற்படி சம்பவத்திற்கு நடவடிக்கை எடுக்க வேண்டி புகார் வாக்குமூலம் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. வழக்கு பற்றி போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

1. எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை என்று சொல்லப்பட்டதால் குறுக்குவிசாரணை முடிக்கப்பட்டது.

**மறுவிசாரணை இல்லை.**

Taken before me in open court in the presence of accused and read over to the witness and acknowledged by him/her to be Correct.

Sd/ Tr. M. Kadarkarai Selvam
Judicial Magistrate No.I,
Kovilpatti.